கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2011/2012

**PHYS 2203** தமிழர் சிந்தனை வரலாறு

**( History of Tamilian Thoughts )**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து ஒரு வினாவிற்கும் எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

1. "சிந்தனை வளர்ச்சியின் வரலாற்றடிப்படையையொட்டியே ஒரு தேச மக்களின் மெய்யியல், பண்பாடு, நாகரீகம் போன்றவற்றை மதிப்பிடலாம்" இக்கருத்தமைவை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் சிந்தனைப்பாங்குகளை மதிப்பிடுக.

   அ) ஐரோப்பிய சிந்தனை வரலாறு ( 08 புள்ளிகள் )

   ஆ) இந்திய சிந்தனை வரலாறு ( 09 புள்ளிகள் )

   இ) தமிழர் சிந்தனை வரலாறு ( 09 புள்ளிகள் )

2. திருக்குறளின் அடிப்படையில் பின்வரும் எண்ணக்கருக்களை மதிப்பிடுக.

   அ) ஆளுமைமிக்க அரசன் ( 06 புள்ளிகள் )

   ஆ) அறிவார்ந்த அமைச்சு ( 06 புள்ளிகள் )

   இ) குறிப்பறிதலும் தூதும் ( 06 புள்ளிகள் )

   ஈ) குடிமக்களும் நிலமும் ( 07 புள்ளிகள் )

3. தமிழர் சிந்தனைப்பாங்கில் பெண்ணின் வகிபாகம் குறித்து பின்வரும் காலங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

அ) சங்ககாலம் (08 புள்ளிகள் )

ஆ) சங்கமருவிய காலம் ( 08 புள்ளிகள் )

இ) சிலப்பதிகார காலம் ( 09 புள்ளிகள் )

4. பின்வருவனவற்றில் யாதேனும் இரண்டினைக் குறித்து குறிப்புரை எழுதுக.

அ) தமிழர் சிந்தனையில் கலையும் கலைப்படைப்பும்

ஆ) தொல்காப்பியம் குறிப்பிடும் ரசக் கொள்கை

இ) தமிழர் சிந்தனை மரபில் அறம்

ஈ) தனிமனிதனும் சமூகமும் ( 2x12.5=25 புள்ளிக

பகுதி II

5. பல்லவர் காலத்துப் பக்தி இயக்கத்தின் செயற்பாடுகளை எடுத்துக்கூறி மதிப்பிடுவதுடன் அவை தமிழர்சிந்தனை மரபில் ஏற்படுத்திய தாக்கங்களை ஆராய்க. ( 25 புள்ளிகள்

6. "சோழர் காலத்தில் சைவசித்தாந்தம் மெய்யில் அந்தஸ்தைப் பெறுவதற்கு வாய்ப்பாக சங்கம் மருவிய் காலச் சிந்தனைகள், சமய அனுட்டானங்கள் வழிகோலின" ஆராய்க.

அல்லது

மணிமேகலையில் இடம்பெறும் பௌத்தக் கருத்துக்களை எடுத்துக்கூறி விளக்குக.

( 25 புள்ளிகள் )